**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி.**

**OS 171/2023**

**20.08.2026**

**PW- 1**

**வா.சா.1. பத்மாராணி, க/பெ. இளங்கோவன் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எந்த தேதியில் கிரயம் செய்வது சம்மந்தமாக பேசிக்கொண்டோம் என்றால் - 13.12.2021ல் கிரயம் செய்துக்கொண்டோம். கிரயம் செய்வது சம்மந்தமாக எப்போது பேசிக்கொண்டோம் என்றால் - காலையில் 10.00 மணியிருக்கும். கிரயம் பேசும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் - கஸ்தூரி, தென்னவன் ஆகியோர் இருந்தார்கள். என் தரப்பில் யார் யார் இருந்தார்கள் என்றால் - பாலு, தாஸ், நான் மற்றும் எனது கணவர் இளங்கோவன் இருந்தோம். அன்று காலை 10.00 மணிக்கு தான் கிரய ஒப்பந்தம் சம்மந்தமாக பேசினோம். பணம் யாரிடம் கொடுத்தேன் என்றால் - தென்னவன் மற்றும் கஸ்தூரி இருவரும் சேர்ந்து வாங்கிக்கொண்டார்கள். தென்னவன் கையெழுத்து எதுவும் போட்டாரா என்றால் - பதிவு செய்யும்போது போடுவதாக சொன்னார். பணம் கொடுக்கும்போது கஸ்தூரி வாங்குவதை தென்னவனும் அருகில் இருந்து பார்த்தார் என்றால் - சரிதான். தென்னவனும் வாரிசு என்ற முறையில் அவரிடம் கையெழுத்து கேட்டேனா என்றால் - கேட்டேன். பதிவு செய்யும்போது போடுவதாக தென்னவன் சொன்னார். அன்றைய தேதியில் தென்னவன் இருந்த விவரம் எங்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் - சரிதான். பதிவு செய்வதற்கு பத்திரம் யார் வாங்கி வந்தார்கள் என்றால் - என் மகன் தான் வாங்கி வந்தார். என் மகன் எத்தனை மணிக்கு பத்திரம் வாங்க கிளம்பினார் என்றால் - என் மகன் திருச்சியில் வேலை பார்த்து வந்தார். அங்கிருந்து பத்திரம் வாங்கியும் வந்தார். என் மகன் என்ன வேலை செய்தார் என்றால் - கடையில் வேலை பார்த்தார். என் மகன் திருச்சியில் வேலை பார்த்தாகவோ அங்கு இருந்ததாகவோ என்னிடம் எதுவும் ஆதாரம் உள்ளதா என்றால் - இல்லை. நான் ஏன் அருகில் உள்ள பகுதியில் பத்திரம் வாங்கவில்லை என்றால் - என் மகன் திருச்சியிலிருந்து வாங்கி வருவதாக சொன்னதால் வாங்கவில்லை. ஒப்பந்தம் எத்தனை மணிக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் - மதியம் 01.00 மணிக்கு பதிவு செய்தோம். பதிவு செய்யும்போது யார் யார் இருந்தார்கள் என்றால் -நான், தென்னவன், எனது கணவர் இளங்கோவன், கஸ்தூரி மற்றும் சாட்சி இருந்தோம். பத்திரம் யார் பெயரில் வாங்கப்பட்டது என்றால் - என் பெயரில்தான் வாங்கப்பட்டது. பத்திரத்தில் கஸ்தூரி கையெழுத்து போட்டாரா என்றால் - அவர் ரேகை வைத்தார். வேறு யார் யார் கையொப்பம் செய்தார்கள் என்றால் - பாலு, தாஸ் ஆகியோர்கள் கையொப்பம் செய்தார்கள். கஸ்தூரியின் கைரேகை அருகே LTI என்று எழுதியது யார் என்றால் - பதிவாளர் எழுதியிருக்கலாம். கைரேகை பதிவாளர் முன்பு தான் வைத்தார் என்றால் - சரிதான். ஒப்பந்தத்தில் உள்ள கைரேகையை கஸ்தூரியின் கைரேகை தான் என்று நிருபிக்க கைரேகை நிபுணருக்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் - ஆட்சேபைண இல்லை. கிரய ஒப்பந்தில் ஏற்பட்ட அன்றைய தேதியில் தாவா சொத்தின் அனுபவம் என் வசம் ஒப்படைக்கப்பட்டதாக பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் - எழுதப்பட்டுள்ளது. அன்றைய தேதியிலேயே கிரய ஒப்பந்தம் பதிவு செய்யப்பட்டது என்றால் - சரிதான். நான் சொல்லும் சாட்சியம் எல்லாமே பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடந்துக்கொள்ள வேண்டும் என்பதுதான் என்றால் - சரிதான். கிரயம் எவ்வளவு குழிக்கு பேசப்பட்டது என்றால் - குழிக்கு ரூ.6 ஆயிரம் என்று பேசப்பட்டது. குழி சம்மந்தமாக பேசப்பட்டபோது மேற்கண்ட 5 நபர்கள் தான் இருந்தார்கள் என்றால் - சரிதான். பணம் எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் - மதியம் 02.00 மணிக்கு கொடுத்தேன். செக்காக கொடுத்தேனா என்றால் - ரொக்கமாக கொடுத்தேன். ரூ.50 ஆயிரம் 8 கட்டுகளாக ரூ.4 இலட்சம் கொடுத்தேன். கிரயம் பதிவு

செய்தபோதும் தென்னவன் எங்களோடு வந்தார் என்றால் -சரிதான். தென்னவன், கிரய ஒப்பந்தம் ஏற்பட்டபோது வெளிநாட்டில் இருந்தார் என்றால் - சரியல்ல. தென்னவன் வெளிநாட்டில் இருந்தது உண்மை என்றால் நான் கிரயம் ஒப்பந்தம் செய்தேன் என்பது தவறு என்றால் - சரியல்ல. நான் கிரய ஒப்பந்தம் ஏற்பட்டதாக சொல்லும் தேதியில் தென்னவன் வெளிநாட்டில் இருந்தார் என்றும் நான் மோசடியாக கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றாலும் - சரியல்ல. நான் என் மகனை அனுப்பி திருச்சியிலிருந்து பத்திரம் வாங்கிய வந்ததாக சொல்வதும் தவறானது மோசடியானது என்றால் - சரியல்ல. நான், 1ம் பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மோசடியான ஒரு கிரய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. அனுபவத்தை பொறுத்து உரிமை கோரவேண்டும் என்றால் சட்டப்படி ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்றால் - அதுபற்றி தெரியாது. கிரய ஒப்பந்தம் போட்டது தொடர்பாக ஏதேனும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் - சாட்சி அனுப்பியிருப்பதாக சொல்கிறார். அவ்வாறு எந்த அறிவிப்பும் பிரதிவாதிக்கு அனுப்பவில்லை என்றால் - சரியல்ல. சாட்சி தற்போது அறிவிப்பு அனுப்பவில்லை என்கிறார். தாவா சொத்து, கஸ்தூரி கடந்த 02.11.2022ம் தேதியன்று செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் அவரது கணவரான தென்னவனுக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் - சரிதான். ஏற்றுதலை ஆற்றுகை பரிகாரம கோரி வழக்கு தாக்கல் செய்யும்போது ஒரு அறிவிப்பு கூட அனுப்பாமல் வழக்கு தாக்கல் செய்யவேண்டிய அவசியம் என்னவென்றால் - சொத்தை விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்ததால் அறிவிப்பு அனுப்பவில்லை. 2023ம் ஆண்டு ஜனவரிக்கு பிறகு 13.03.2023ல் வழக்கு தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் என்னால் தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டது என்றால் - சரியல்ல. கிரய ஒப்பந்தம் யார் டைப் செய்தார்கள் என்றால் - பதிவாளர் செய்தார். எத்தனை பக்கங்கள் டைப் செய்யப்பட்டது என்றால் - ஞாபகம் இல்லை. எங்கு டைப் செய்யப்பட்டது என்றால் - உள்ளிக்கோட்டை பதிவாளர் அலுவலகத்தில் டைப் செய்யப்பட்டது. பணம் கொடுத்ததும் உள்ளிக்கோட்டை பதிவாளர் அலுவலகத்தில் தான் பதிவு செய்தபிறகுதான் 02.00 மணிக்கு என்றால் - சரிதான். நான், ஆவணங்கள் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி அருகதையற்றவர் என்றால் - சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பொய்யான ஆவணத்தை தயார் செய்து இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் - சரியல்ல.

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

OS 9 2026 ExA9

MUTHURAMAN

Digitally signed by MUTHURAMAN
DN: cn=MUTHURAMAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.